376—

சொந்தக் கட்டடம்

***32436—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை, இளையான்குடி மற்றும் திருப்புவனத்திலுள்ள ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு எங்கெல்லாம் சொந்தக் கட்டடம் கட்டித்தர முடியுமோ அதை உடனே மேற்கொள்ள வேண்டுமென்று துறைக்கு அறிவுறுத்தியிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவின் அடிப்படையில் மானாமதுரை, இளையான்குடி மற்றும் திருப்புவனம் ஆகிய 3 குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகங்களுக்கு இடம் தேர்வு செய்யும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.*

திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் விடிவெள்ளியே! கழகத்தின் கம்பீரமே! தமிழ்த் தாயின் தலைமகளே! உலகத் தலைவர்கள் பாராட்டும் உன்னதத் தலைவியே! (மேசையைத் தட்டும் ஒலி) அன்னை சந்தியா தாய் பெற்றெடுத்த தலைமகளே! மாண்புமிகு இதய தெய்வம்*

2014 ஆகஸ்ட் 8]

தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மானாமதுரை தொகுதியில் மானாமதுரை, இளையான்குடி மற்றும் திருப்புவனம் ஆகிய 3 ஒன்றியங்கள் இருக்கின்றன. மானாமதுரை ஒன்றியத்தில் 147 மையங்களும், இளையான்குடி ஒன்றியத்தில் 149 மையங்களும், திருப்புவனம் ஒன்றியத்தில் 134 மையங்களும் இயங்கி வருகின்றன. இந்த 3 ஒன்றியங்களில் உள்ள மையங்கள் அனைத்தும் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. ஆகவே, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் இந்த 3 ஒன்றியங்களில் உள்ள மையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது முழுக்க முழுக்க மத்திய அரசினுடைய திட்டம். இந்தத் திட்டத்தில் மத்திய அரசாங்கம் வாடகைக்கு மட்டும்தான் நிதி ஒதுக்கீடு செய்கிறார்கள். குழந்தை வளர்ச்சித் திட்டத்தினுடைய அலுவலகம் திறப்பதற்கு 5,800 ரூபாய் நிர்ணயம் செய்து, அதைத்தான் ஒரே மாதிரியாக வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அந்த வாடகைக்குள்ளேதான் கட்டடம் அமையப் பெற வேண்டுமென்ற மத்திய அரசாங்கத்தினுடைய விதிக்குட்பட்டு, அதன் அடிப்படையிலே வாடகைக் கட்டடங்களிலே இப்போது செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் குழந்தைகளை மனிதநேயத்தோடு கவனிக்க வேண்டும், அப்படிக் கவனிக்கக்கூடிய அந்த ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டுமென்ற உத்தரவின் அடிப்படையிலேதான் மாவட்ட நிருவாகம் மூலம் நிலம் தேர்வு செய்யக்கூடிய பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நிலம் தேர்வு செய்யப்பட்டவுடன் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

[2014 ஆகஸ்ட் 8

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.*

திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் மத்திய அரசு நிதி வழங்குகிறது என்று சொல்கிறார்கள், மத்திய அரசு எவ்வளவு நிதி தருகிறது, மாநில அரசால் எவ்வளவு நிதி தரப்படுகிறது, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலகங்கள் எத்தனை உள்ளன, அவற்றின் பணிகள் என்ன என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் மைய அரசினுடைய பங்கு 75 சதவீதம். மாநில அரசினுடைய பங்கு 25 சதவீதம். 2013-2014 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்திற்கு மைய அரசு 560 கோடியே 28 இலட்சத்து 4,970 ரூபாய் மட்டுமே வழங்கியது. மாநில அரசு, 742 கோடியே 69 இலட்சத்து 74 ஆயிரத்து 30 ரூபாயை நம்முடைய தமிழக அரசாங்கம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மனிதநேயத்தோடு 57 சதவீதத்தை வழங்கி இருக்கிறார்கள். இதில் மைய அரசினுடைய பங்கு என்பது வெறும் 43 சதவீதம் மட்டும்தான்.*

முற்பகல் 10-20

அதுமட்டுமல்ல, இந்தக் குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்களுடைய பங்கு என்பது குழந்தைகளைக் கவனிக்கும் பணி, ஊட்டச்சத்து, மனம், உடல்ரீதியான அத்தனைப் பிரச்சினைகளையும் கவனிக்கக்கூடிய பணி ஆகியவையாகும். கிராமங்களிலே குழந்தைகளைக் கவனிக்கக்கூடிய அந்தப் பணிகளுடன் சிசு இறப்பு, நோயுறும் தன்மையின் விகிதம், ஊட்டச்சத்து குறைவு அறிதல் ஆகிய இதுபோன்ற பணிகளையெல்லாம் இன்றைக்குச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

43 குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தினுடைய அலுவலகங்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன, இவை அனைத்துமே வாடகைக் கட்டடங்களிலே செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன என்று நம்முடைய மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் சொன்னார்.

2014 ஆகஸ்ட் 8]

சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டதற்குப் பிறகு, அந்தந்த மாவட்டங்களிலே இடம் தேர்வு செய்யப்படுகிறது. அப்படித் தேர்வு செய்யப்படுகிறபோது, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று உரிய நடவடிக்கை விரைவில் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 377, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ராமமூர்த்தி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

377—

கல்வியியல் கல்லூரி

***36848—திரு. ஆர். ராமமூர்த்தி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விக்கிரவாண்டி தொகுதியில் கல்வியியல் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி தொகுதியில் அரசு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் ஏதும் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ராமமூர்த்தி அவர்கள்.*

திரு. ஆர். ராமமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சட்டமன்றத் தேர்தலில் உருவாக்கப்பட்ட புதிய தொகுதி விக்கிரவாண்டி. சென்ற ஆண்டிலே மாண்புமிகு முதல்வர்*